**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102088

1. District / மாவட்டம் : தஞ்சாவூர் | PS / காவல்நிலையம்: VXAC தஞ்சாவூர் | Year / ஆண்டு: 2018 | FIR No. / மு.த.அ. எண்: 05/18 | Date / நாள்: 16/04/2018

2. (i) Act சட்டம்: Sec. 7 of Prevention of Corruption Act 1988 — Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 30.3.18, Date to : நாள் வரை 7.4.18 & 13.4.18
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.4.18 — Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

Complainant arrived VXAC office 16/4/18 at 09.00 hrs. FIR registered 16.4.18 at 16.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written - Typed in Computer.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — 75 கி.மீ. தென் கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி உதவி தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகம், பேராவூரணி. (இ)பேப்பு) அலுவலகம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — C. தேவி
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — W/o. S. கர்ணன் (லேட்)
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 46/18
(d) Nationality : நாட்டினம் — இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் — தலைமை ஆசிரியர்
(g) Address : முகவரி — 298/6, [illegible] வடக்கு, மகாராஜசமுத்திரம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி. கோ. தமிழ்ச் செல்வி, உதவி தொடக்கக் கல்வி அலுவலர் எண். 1, பேராவூரணி. இபேப்பு- அலுவலகம்.
Res : வ.உ.சி. நகர் மேல் தெரு, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant/ Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

[illegible] தாமதம்.

9. **Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)**
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)**

10. **Total value of properties stolen / involved :**
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு**

11. **Inquest Report / Un-natural death Case No. if any:**
**பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்**

12. **FIR Contents (Attach separate sheet, if required) :**
**முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)**

பணிந்து அனுப்பப்பட்டது:

தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய நான், 16.04.2018ம் தேதி காலை 9.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருமதி.C.தேவி, க/பெ.S.கர்ணன் (லேட்). 298/6, லெட்சத்தோப்பு வடக்கு மகாராஜசமுத்திரம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் என்பவர் லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: C.தேவி, க/பெ. S.கர்ணன் (லேட்), 298/6, லெட்சத்தோப்பு வடக்கு, மகாராஜசமுத்திரம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம். பெறுநர்: உயர்திரு லஞ்ச ஒழிப்பு அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்பு அலுவலகம், தஞ்சாவூர். அய்யா, நான் பட்டுக்கோட்டை, மகாராஜசமுத்திரம், லெட்சத்தோப்பு வடக்கில் குழந்தைகளுடன் வசித்து வருகிறேன் நான் பட்டுக்கோட்டை, மகாராஜசமுத்திரம், லெட்சத்தோப்பு வடக்கில் குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். நான் M.A., M.Phil., B.Ed., படித்துள்ளேன். நான் பேராவூரணி ஒன்றியம் வேலாம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எனது கணவர் திரு.கர்ணன் கடந்த 03.10.2017ல் உடல் நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். அவர் பேராவூரணி ஒன்றியம், பூவாலூர் ஊராட்சி

13. **Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.**

**எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.**

**FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.**
**மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.**

16/4/18

14. **Signature / Thumb Impression of the Complainant / Informant**
**குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு**

P. [signature] 16/4/18

**Signature of the Officer in-charge, Police Station**
**காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்**

16/4/18

15. **Date & Time of despatch to the court:**
**நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்**

**Name: பெயர்** P. PADMAVATHI
**Rank: நிலை** INSPECTOR OF POLICE ......................**No. எண்** ..........
V & AC, THANJAVUR

ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஆங்கில பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். என் கணவர் இறந்தபிறகு அவரது Gratuity மற்றும் Family pension ஆகியவற்றை பெறவேண்டி, நான் ஆவணத்தில் உள்ள பேராவூரணி உதவி தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு சென்று விவரம் கேட்டேன், அதற்கு பேராவூரணி உதவி தொடக்கக் கல்வி அலுவலர் திருமதி.கோ.தமிழ்செல்வி, யாரையாவது வைத்து எல்லா பில்களையும் ரெடி செய்து கொண்டு வாருங்கள், நான் AG ஆபீசுக்கு அனுப்புகிறேன் என்றும், அதற்கு தனக்கு ரூ.5000/- பணம் கொடுங்கள் என்றும் கேட்டார், அதன்படி எனக்கு தெரிந்த திருச்சிற்றம்பலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் கிளார்க்காக வேலைசெய்யும் சுரேஷ் என்பவரிடம், மேற்படி பில்களை தயார் செய்துகொண்டு, நவம்பர் 2017 முதல் வாரத்தில் பட்டுக்கோட்டை வ.உ.சி. நகர் முதல் தெருவில வசித்து வரும், பேராவூரணி உதவி தொடக்கக் கல்வி அலுவலர் திருமதி.கோ.தமிழ்செல்வி அவர்களை அவரது வீட்டிற்க்கு சென்று சந்தித்து, மேற்படி பில்களை கொடுத்தேன், அப்போது அவர் என்னிடம் கேட்டிருந்த ரூ.5000/-த்தை கேட்டு பெற்றுக்கொண்டு, மேற்படி பில்களை AG ஆபீசுக்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். அதன்பிறகு சென்னை Accountant General (A&E), Tamil Nadu அலுவலகத்தில் இருந்து கடிதம் எண்.P17/11718150/2/PPO No.F1718150, நாள் 11.01.2018 ன் படி Family Pension மற்றும் Death Gratuity ஆகியவற்றிற்கான உத்தரவு பேராவூரணி உதவி தொடக்கக் கல்வி அலுவலருக்கு அனுப்பப்பட்டு, அதன் நகல் எனக்கு வந்தது, நான் மேற்படி கடிதத்தின் பேரில், ஆவணத்தில் உள்ள பேராவூரணி உதவி தொடக்க கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு பலமுறை சென்று உதவி தொடக்க கல்வி அலுவலர் எண்.1 திருமதி.கோ.தமிழ்செல்வி அவர்களிடம் கேட்டுவந்தேன், அதற்கு அவர், Accountant General அலுவலகத்தில் இருந்து வந்த கடிதத்தை சரிபார்க்கவேண்டும், அதற்கு நிறைய செலவாகும் என்று ரூ.10,000/- என்னிடம் கேட்டார், பின்னர் பேராவூரணி உதவி தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் அலுவலக பணிகளை கவனிக்க வைத்திருந்த வெளிநபரான ஸ்ரீராம் என்பவர் என்னிடம், AEEO சொன்னதன் பேரில் உங்கள் கணவரது SPF ரெடிசெய்து வைத்துள்ளேன், என்று கூறி அதன் நகல் ஒன்றை என்னிடம் கொடுத்தார். கடந்த 30.03.2018 பள்ளிக்கு விடுமுறை என்பதால் நான் வீட்டில் இருந்தேன், அன்று மதியம் 02.00 மணியளவில் மேற்படி ஸ்ரீராம் என் வீட்டிற்கு வந்து, AEEO சொன்னதன் பேரில் உங்கள் கணவர் இறந்ததற்கு Gratuity, SPF மற்றும் Family pension எல்லாவற்றையும் ரெடி செய்து வைத்துள்ளேன், AEEO உங்களிடம் கேட்ட ரூ.10,000/-த்தை கேட்டு வாங்கி வரசொன்னார். நான் இந்த வேலைகளை எல்லாம் பார்த்துள்ளேன், அதற்காக எனக்கு ரூ.5000/-ம் கொடுங்கள் என்று கேட்டார். நான் அவரிடம் என்னிடம் தற்போது அவ்வளவு பணம் இல்லை ரூ.1000/- மட்டும்தான் உள்ளது, பிறகு பார்க்கலாம் என்று சொன்னேன், அதற்கு அவர் நீங்கள் AEEO

விற்கு உரிய பணம் கொடுத்தால் தான் உங்கள் கணவருக்குறிய பணபலங்களை பெற்றுத் தரமுடியும் என்று சொன்னார். அப்போதைக்கு நான் பார்க்கிறேன் என்று சொன்னேன், இப்போது எதாவது இருந்தால் கொடுங்கள் என்று சொன்னார், நான் என் கையில் இருந்த ரூ.1000/-த்தை ஸ்ரீராமிடம் கொடுத்து அனுப்பிவிட்டேன். பிறகு 07.04.2018 ம் தேதி பள்ளிக்கு சென்று விட்டு, மதியம் மட்டும் விடுப்பு எழுதி வைத்துவிட்டு, பட்டுக்கோட்டைக்கு வந்தேன். அன்று மாலை நானும் என் தம்பி சிவாவும் AEEO திருமதி.கோ.தமிழ்ச்செல்வி அவர்களை அவரது வீட்டிற்க்கு சென்று சந்தித்தோம், பணம் அவசரமாக தேவைப்படுவதால், பில்லை சீக்கிரம் பாஸ்செய்து தரும்படி கேட்டேன், அதற்கு அவர் உங்களிடம் கேட்ட பணத்தை ஸ்ரீராமிடம் கொடுத்து விட்டீர்களா என கேட்டார், மேலும் ஸ்ரீராமிற்கும் பணம் கொடுங்கள் என்று சொன்னார், அதற்கு நான் ஸ்ரீராம் உங்களுக்கு ரூ.10,000/-மும், அவருக்கு ரூ.5,000/-மும் வேண்டும் என்று கேட்டார், நான் என்னிடம் பணம் இல்லை என்று சொல்லி ரூ.1000/- ஸ்ரீராமிற்கு கொடுத்தேன் என்று சொன்னேன். நான் AEEO விடம் கொஞ்சம் குறைத்து சொல்லுங்கள் என்றேன், அதற்கு உதவி தொடக்கக் கல்வி அலுவலர், நான் உங்கள் பில்களையெல்லாம் treasury அனுப்பிய பிறகு நான் எவ்வளவு பணம் வேண்டும் என்று போன் செய்து சொல்கிறேன், அது வரை யாரிடமும் பணம் கொடுக்கவேண்டாம் என்று சொன்னார். அதன்படி நான் ஸ்ரீராமிடம் பணம் எதுவும் கொடுக்கவில்லை, பிறகு 13.04.2018ம் தேதி மதியம் 02.00 மணியளவில், மேற்படி உதவி தொடக்கக் கல்வி அலுவலர் திருமதி.கோ.தமிழ்ச்செல்வி அவர்கள் அவருடைய செல்போன் 9443619117 என்ற எண்ணிலிருந்து, என் செல் போன் எண்.9443407399 ற்கு தொடர்பு கொண்டு, உங்கள் பில்களை எல்லாம் treasury க்கு அனுப்பிவிட்டேன், நீங்கள் ஸ்ரீராம் சொன்னபடி பணத்தை கொடுத்துவிடுங்கள் என்று சொன்னார், நான் எவ்வளவு என்று கேட்டதற்கு, ஸ்ரீராம் என்ன கேட்கிறாரோ அதை கொடுங்கள், ஸ்ரீராமிடம் பேசிக்கொள்ளுங்கள் என்று சொன்னார். அப்போது நான் உங்களுக்கு உரிய தொகையை தனியாக கொடுப்பதாக சொன்னேன், அதற்கு அவர் 17.04.2018 செவ்வாய் கிழமை காலை நான் அலுவலகத்திற்கு செல்லுமுன் வீட்டில் வந்து பார்க்கும்படி சொன்னார். ஸ்ரீராம் என்ன கேட்கிறாரோ அதை அவரிடம் கொடுத்துவிடுங்கள் என்று சொன்னார். எனக்கு என் கணவர் இறந்தற்கான பணப் பயன்களை பெற்றுத்தர, உதவி தொடக்கக் கல்வி அலுவலர் கேட்ட பணம் ரூ.10,000/-த்தை கொடுக்க விருப்பமில்லை. எனவே இன்று 16.04.2018 என் தம்பி சிவாவுடன் வந்து புகார் மனு கொடுக்கிறேன். என்னிடம், ரூ.10,000/- லஞ்சம் கேட்ட திருமதி.கோ.தமிழ்ச்செல்வி, உதவி தொடக்கக் கல்வி அலுவலர், பேராவூரணி இருப்பு ஆவணம் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் சென்னை Accountant General (A&E), Tamil Nadu அலுவலகத்தில் இருந்து எனக்கு வந்த கடிதம் எண்.P17/11718150/2/PPO No.F1718150, நாள் 11.01.2018 ன் நகல்,

என்னிடம் ஸ்ரீராம் கொடுத்த SPF ரெடிசெய்து வைத்துள்ளதற்கான நகல், என் கணவர் இறப்புச் சான்று மற்றும் வாரிசுசான்று நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன் இப்படிக்கு Sd/-.C.Devi, 16/4/18.

Madam, Received this petition on 16.04.2018 at 9.00 hrs and copy of the same is sent to the SP/SR, DVAC, Chennai, for requesting PE. Sd/- P.Padmavathi, 16/04/18,,Inspector of Police, V&AC, Thanjavur.

After receiving order from the SP/SR, DVAC, Chennai to conduct Preliminary Enquiry in PE.107/2018/EDN/TH, dated 16.04.2018 and then registered this PE in Thanjavur V&AC PE No.5/2018/EDN/TH on 16.04.2018 at 11.30 hrs. Sd/-. P.Padmavathi, 16/04/18, Inspector of Police. V&AC Thanjavur.

முதல்நிலை விசாரணையில் எதிரிகள் பணம் கையூட்டாக கேட்டுள்ளதை உறுதிப்படுத்த புகார்தாரர் தேவி ஆஜர் செய்த செல்போனிலிருந்த உரையாடல்களை கேட்டதில் திருமதி.கோ.தமிழ்செல்வி, உதவி தொடக்கக் கல்வி அலுவலர் வாதியின் கணவர் இறந்தற்கான பணப் பயன்களை பெற்றுத்தர, வாதியிடம் ரூ.10,000/- லஞ்சம் கேட்டதற்கான முகாந்திரம் இருந்தது, மேலும் திருமதி.கோ.தமிழ்செல்வி, உதவி தொடக்கக் கல்வி அலுவலர், என்பவரது முன் நடத்தைகள் பற்றி விசாரணை செய்யப்பட்டது. இதன் விபரம் பற்றி காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்களுக்கு தெரிவித்தும், இன்று 16.04.2018ந் தேதி 16.30 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.05/2018 பிரிவு 7 ஊழல் தடுப்புச்சட்டம் 1988 ன்படி வழக்கு பதிவு செய்தேன். Sd/- P.Padmavathi, 16/04/18, Inspector of Police, V&AC, Thanjavur

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகளுடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தஞ்சாவூர் @ கும்பகோணம் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல்தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

P. Padmavathi 16/4/18

Inspector of Police,

V&AC, Thanjavur.